**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 11.08.2025**
**OS. No. 23/2014**
**வழக்கு சாட்சி PW.2– முருகன், த/பெ.ராஜி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். 1 முதல் 3 பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் என்னுடைய பங்காளிகள் ஆவார்கள். விவசாய மின் இணைப்பு தவறாக 1ம் பிரதிவாதியின் மாமியார் மாதம்மாள் பெயருக்கு வாங்கிவிட்டதாக சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக விவசாய மின் இணைப்பு பெறவேண்டும் என்றால் அந்த நிலத்தில் கிணறு இருக்கவேண்டும் என்றும், மனுவில் அது சம்மந்தமான அனைத்து விவரங்களும் தெரிவித்ததன்பேரில் ஸ்தல ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படும் என்றால் சரிதான். மின் இணைப்பு தவறாக பெற்றுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தில் கிணறு எந்த வருடம் வெட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. கிணறு ச.எண்.534/3Cல் அமைந்துள்ளது.

2) தாவா கிணற்றிற்கு மின் இணைப்பு எந்த ஆவணங்களின் அடிப்படையில் எப்போது வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 32 வயது ஆகிறது. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எலக்ரிக்கல் பணி செய்து வருகிறேன். என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 1992ம் வருடம் வாய்மொழி பாகம் பிரித்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் பெற்றோர்கள் சொல்லி எனக்கு தெரியும். மின் இணைப்பு கோரி யார் மனு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஸ்தல ஆய்வு மேற்கொண்டபோது எந்த அலுவலர்கள் வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாகப்பிரிவினை

ஏற்பட்டதாக நான் சொல்லும் சமயத்தில் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். எந்த விவரமும் தெரியாததால் 4 முதல் 7 பிரதிவாதிகள் தவறாக மின் இணைப்பு வழங்கிவிட்டதாக நான் சொல்லும் சாட்சியம் செல்லாது என்றால் சரியல்ல. நான் எனக்கு நேரடியாக மின் இணைப்பு வழங்கப்பட்ட விவரம் தெரியும் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாகத்தான் இந்த வழக்கு என்றால் சரிதான். பொதுவாக ஆவணங்களின் அடிப்படையிலும், அனுபத்தின் அடிப்படையிலும் தான் ஆவணம் செய்வார்கள் என்றால் சரிதான்.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.